பத்திரிக்கைச் செய்தி

கடலூர் மாவட்டம், அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லத்தில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துநர்கள் மூலம் மதிப்பூதிய அடிப்படையில் ஆற்றுப்படுத்துதல் *(Counselling)* சேவை வழங்கிட காலியாக உள்ள *2* ஆற்றுப்படுத்துநர்கள் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பதவிக்கு தகுதியான உளவியல் மற்றும் ஆற்றுப்படுத்துதலில் முதுகலைப்பட்டம் பெற்ற நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்கண்ட முகவரியில் *13.11.2026* அன்று மாலை *05.30* மணிக்குள் கிடைக்குமாறு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் சுயமுகவரியிட்ட விண்ணப்பத்துடன் தங்களுடைய அனைத்து சான்றிதழ்களின் ஒளிநகலுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். தேர்வு செய்யப்படும் ஆற்றுப்படுத்துநர்களுக்கு வருகையின் அடிப்படையில் *180* நாட்களுக்கு *(ஒரு* வருடத்திற்கு நாட்களுக்கு மிகாமல் இரு தினங்களுக்கு ஒரு முறை வீதம்*)* மதிப்பூதிய அடிப்படையில் ஒரு வருகைக்கு ரூ.*1000/- (*ரூபாய் ஆயிரம் மட்டும்*)* வழங்கப்படும். மேலும் விவரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட கண்காணிப்பாளர் அவர்களை தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி
அன்னை சத்யா அரசினர் குழந்தைகள் இல்லம்,
(அரசு சேவை இல்ல வளாகம்),
நெல்லிக்குப்பம் மெயின் ரோடு,
செம்மண்டலம் கடலூர் – *607 001*
அலைபேசி எண். *63826 12274*

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்டுள்ள அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது கறித்து அரசின் முடிவே இறுதியானது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர் மாவட்டம்.